DINATHANTHI-18-DEC-2015

தினத்தந்தி



சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 'ஈஷா' யோகா மையம் சார்பில் நடந்த 'சத்சங்கம்' எனும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் 'ஈஷா' மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் கலந்துகொண்டு, நிவாரண பணிகளில் ஈடுபட்ட தன்னார்வ தொண்டர்களிடம் கலந்துரையாடிய காட்சி.

### ஏரிப்பகுதிகளை ஆக்கிரமித்தது தவறு

# "மழை வெள்ள பாதிப்புக்கு கடவுளை திட்டி பயன் இல்லை"

## சென்னையில், சத்குரு ஜக்கி வாசுதேவ் பேச்சு

சென்னை, டிச.18– ஏரிப்பகுதிகளை ஆக்கிரமித்தது தவறு என்றும் மழை வெள்ள பாதிப்புக்கு கடவுளை திட்டி பயனில்லை என்றும் சென்னையில் 'ஈஷா' யோகா மையத்தின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் கூறினார்.

### 'ஈஷா' மையம்

சென்னை, கடலூர் உள்பட கடலோர மாவட்டங்கள் மற்றும் தமிழகத்தில் வெள்ளம் பாதிக்கப்பட்ட இடங்களில் 'ஈஷா' யோகா மையம் சார்பில் நிவாரண பணிகளில் ஈடுபட்ட தன்னார்வ தொண்டர்கள் பங்கேற்கும் 'சத்சங்கம்' எனும் கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் 'ஈஷா' மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் கலந்துகொண்டு, நிவாரண பணிகளில் ஈடுபட்ட தன்னார்வ தொண்டர்களிடம் கலந்துரையாடினார். பின்னர் வெள்ள நிவாரண பணிகளில் சிறப்பாக பணியாற்றிய நடிகர் பார்த்திபன் உள்ளிட்ட 7 பேருக்கு அவர் நினைவுப்பரிசு வழங்கினார்.

நிகழ்ச்சியில் டைரக்டர் எஸ்.ஏ.சந்திரசேகர், அவரது மனைவி ஷோபா சந்திரசேகர், நடிகை சுஹாசினி ஆகியோரும் பங்கேற்றனர். முன்னதாக நிகழ்ச்சியில் ஜக்கி வாசுதேவ் பேசியதாவது:–

### இயற்கையின் தாக்கம்

தமிழகத்தில் மழை வெள்ளத்தால் பாதிப்புகள் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உதவ பெருமளவில் உதவி வந்ததை

வெள்ள நிவாரண பணிகளில் சிறப்பாக பணியாற்றிய நடிகர் பார்த்திபனுக்கு 'ஈஷா' மைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் நினைவுப்பரிசு வழங்கிய போது எடுத்தபடம்

எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இப்படிப்பட்ட எண்ணங்கள் தான் இந்த சமயத்தில் உதவி. பேரிடர் என்பது இயற்கையின் தாக்கம் தான். அதற்காக கடவுளை திட்டி பயனில்லை. பூமியின் சூழ்நிலையை உணராமல் போனது யார் குற்றம்? ஏரிப்பகுதிகளை ஆக்கிரமித்தது யார்? இந்த தவறுகள் திருத்தப்படவேண்டும். ஆனால் இதை யோசிக்க நாம் தயாராக இல்லை.

நான் தவறு செய்துவிட்டேனா? இது தான் இப்போது எல்லாரும் எண்ணிப்பார்க்க வேண்டிய கேள்வி. சமூக அக்கறையில் மனிதனின் பங்கு மிக முக்கியமானது. இதனை எண்ணிப்பார்த்து, இயற்கையோடு இணைந்து வாழ பழகிக்கொண்டாலே, நல்லது.

### இடைப்பட்ட உறவுகள்

நிவாரண பணிகளில் நம்மால் முடிந்தவற்றை மக்களுக்கு செய்துகொடுத்திருக்கிறோம். மழைக்கால நோய்களை தடுக்கும் வகையில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 1 லட்சத்து 98 ஆயிரம் பேருக்கு மருத்துவ பரிசோதனையும், 1½ லட்சம் பேருக்கு நிவாரண பொருட்களும் 'ஈஷா' சார்பில் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் நிவாரண பொருட்கள் சரியாக வழங்கப்படவில்லை என்று குறை கூறும் பேச்சுகளும் வரத்தான் செய்கின்றன. நாம் ஒன்றும் அரசு இல்லை. நம்மால் முடிந்தவற்றை தான் நாம் செய்கிறோம். நம் நாட்டில் குறைசொல்வது என்பது வழக்கமான ஒன்று. யாரோ ஒருத்தர் கொடுக்கிறார், யாரோ ஒருவர் அதனை வழங்குகிறார். இடைப்பட்ட உறவுகள் என்பது நமக்கும், உதவிகள் வாங்கும் நபர்களுக்கும் தான்.

### எல்லா தானமும் கர்மமே

தானம் என்றாலே சேவை தான். எல்லா தானமும் கர்மமே. உடல் உறுப்புகள் தானம் செய்வது சந்தோஷமான விஷயம் தான். ஆனால் வாழும்வரை நமது உடல் உறுப்புகளை ஆரோக்கியமாக வைத்துக்கொண்டால் அதை விட சந்தோஷம் கிடைக்கும் என்பது உண்மை தானே. ஏனெனில் உடல் உறுப்புகளுக்கும் குறிப்பிட்ட ஆயுள் தான் இருக்கிறது என்பதை எல்லாரும் அறிந்துகொள்ள வேண்டும்.

'ஈஷா' மையம் சார்பில் 2016–ம் ஆண்டு ஜனவரி மாத தொடக்கத்தில் கல்வி உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள மாணவ–மாணவிகளுக்கு கல்விக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. எனவே உதவிகளை வழங்குவதில் நாம் நம்மால் முடிந்தவற்றை செய்யவேண்டும். அதில் தான் மகிழ்ச்சி நிலைத்திருக்கிறது. அந்த மகிழ்ச்சி எல்லாருக்கும் கிடைக்கவேண்டும். இனி வரும் காலங்களில் பேரிடர் சமயங்களில் உதவி செய்யும் நபர்களாக இருக்கப் போகிறீர்களா? அல்லது உதவி பெறும் நபர்களாக இருக்கப் போகிறீர்களா? என்பதை யோசித்து செயல்படுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.